பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
23 08 2024 6 45
வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று யுக்ரைன் நாட்டிற்குச் செல்கிறார்.
- நாட்டின் முதலாவது தேசிய விண்வெளி தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
- மருத்துவம் மற்றும் பல் மருத்துவப் படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான உள்ஒதுக்கீட்டின் கீழ் அதிக அளவிலான மாணவர்கள் பயன்பெற்றுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.
- நீர்நிலைகளில் விநாயகர் சிலைகளை கரைப்பது குறித்த வழிமுறைகளை தமிழக மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.
- 20 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சம்மேளன சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய அணி இன்று மாலத்தீவு அணியை எதிர்கொள்கிறது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

போலந்து சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, அந்நாட்டின் கபடி கூட்டமைப்பின் தலைவர் திரு. **Michal Spiczko** மற்றும் அதன் உறுப்பினரான **Anna Kalbarczyk**-ஐ சந்தித்து உரையாடினார்.

கபடி விளையாட்டை பரவலாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுப்பது குறித்து விவாதித்தார்.

இந்தியா – போலந்து நாட்டு கபடி வீரர்களுக்கு இடையே போட்டிகள் நடத்துவது குறித்தும் அவர் ஆலோசனை நடத்தினார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, கபடி விளையாட்டு போலந்தில் அதிக அளவில் விளையாடப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

2016ஆம் ஆண்டு அகமதாபாதில் நடைபெற்ற உலகக்கோப்பை கபடிப் போட்டியில் போலந்து அணியினர் சார்பாக வருகை தந்த **Anna Kalbarczyk**-யுடன் பிரதமர் உரையாடினார்.

<<<<>>>>

நாட்டின் முதலாவது தேசிய விண்வெளி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

'நிலவில் இறங்கி இதயங்களில் இடம்பிடித்த ஒரு சாதனை – இந்தியாவின் விண்வெளி வரலாறு' என்ற கருப்பொருளில் இந்த ஆண்டுக்கான கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன.

இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் குடியரசுத்தலைவர், தேசிய விண்வெளி ஹேக்கத்தான் மற்றும் ரோபாட்டிக் போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்க இருக்கிறார்.

கடந்த ஆண்டு இதேநாளில் இஸ்ரோவின் சந்திரயான்-3 திட்டத்தின்கீழ் நிலவின் தென்பகுதியில் விக்ரம் லேண்டர் வெற்றிகரமாக தரையிறங்கி சாதனை படைக்கப்பட்டது.

பிரக்ஞான் உலாவி நிலவில் இறங்கி ஆய்வுகளை மேற்கொண்டது.

விக்ரம் லேண்டர் தரையிறங்கிய பகுதி சிவசக்தி என்று குறிப்பிடப்பட்டது.

விக்ரம் லேண்டர் வெற்றிகரமாக நிலவில் தரையிறங்கிய இந்த நாளை தேசிய விண்வெளி தினமாக கடந்த வருடம் பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்தார்.

இந்த நாளில் விண்வெளித் துறையில் மிக முக்கியமான சாதனைகள் மற்றும் விண்வெளித்துறையில் இந்தியா அடைந்து வரும் முன்னேற்றங்கள் குறித்த கண்காட்சிகள், சொற்பொழிகள், உரைநிகழ்ச்சிகள் ஆகியவை நாடு முழுவதும் இன்று நடைபெறுகிறது.

<<<<>>>>

தேசிய விண்வெளி தினம் இன்று கொண்டாடப்படுவதை அடுத்து விண்வெளி துறையின் எதிர்காலம் குறித்து ஸ்பேஸ் கிட்ஸ் இந்தியாவின் நிறுவனர் டாக்டர் ஸ்ரீமதி கேசன் உடன் கலந்துரையாடினார் எமது செய்தி ஆசிரியர் எஸ். ஜாய்.

ரஷ்ய விண்வெளி வீரர்கள் இருவர் சென்னையில் நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பிக்க உள்ளதாக ஸ்ரீமதி கேசன் தெரிவித்தார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி யுக்ரைன் தலைநகர் **Kyiv**-க்கு செல்கிறார்.

அந்நாட்டுத் தலைவர் வோலோடிமிர் ஜெலன்ஸ்கியின் அழைப்பின்பேரில் அங்கு செல்லும் அவர், இருதரப்பு உறவுகள் குறித்து உரையாடுகிறார்.

ரஷ்யா – யுக்ரைன் இடையிலான சண்டை நிறுத்தப்பட்டு அமைதி விரைவில் அங்கு வரும் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

வர்த்தகம், வேளாண்மை, அடிப்படை உள்கட்டமைப்பு, மருத்துவம், கல்வி, பாதுகாப்பு, கலாச்சாரம் மற்றும் மக்களுக்கு இடையிலான உறவுகள் குறித்து இரு தலைவர்களும் விவாதிக்க இருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தேசிய அறிவியல் விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வழங்கினார்.

குடியரசுத்தலைவர் மாளிகையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், விஞ்ஞான் ரத்னா, விஞ்ஞான் ஸ்ரீ, விஞ்ஞான் யுவா மற்றும் விஞ்ஞான் குழு ஆகிய நான்கு பிரிவுகளில் 33 விருதுகள் புகழ்பெற்ற விஞ்ஞானிகளுக்கு வழங்கப்பட்டன.

அறிவியல் தொழில்நுட்பத்துறையில் சிறப்பான பங்களிப்பை வழங்கிய மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள பேராசிரியர் கோவிந்தராஜன் பத்மநாபனுக்கு வழங்கப்பட்டது.

அறிவியல் தொழில்நுட்பத்துறையில் சிறப்பான பங்களிப்பை வழங்கிய 13 விஞ்ஞானிகளுக்கு விஞ்ஞான் ஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

அறிவியல் தொழில்நுட்பத்தில் எந்தவொரு துறையிலும் சிறப்பாக பங்களிப்பை வழங்கும் விஞ்ஞானிகளை பெருமைப்படுத்தும் விதத்திலான விஞ்ஞான் யுவா விருது, இந்தியப் பெருகடலின் வெப்பமயமாதல் மற்றும் அதன் விளைவுகள் குறித்த ஆய்வில் ஈடுபட்டுள்ள 18 விஞ்ஞானிகளுக்கு வழங்கப்பட்டது.

23 08 24 6 45 தேசிய அறிவியல் விருதுகள் -2

நிலவின் தென் துருவத்தில் சந்திரயான்-3 விக்ரம் லேண்டரை வெற்றிகரமாக தரையிறக்கியதற்காக இஸ்ரோ விஞ்ஞானிகள் குழுவிற்கு விஞ்ஞான் குழு விருதும் வழங்கப்பட்டது.

<<<<>>>>

ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தினத்தை முன்னிட்டு பத்ம விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2025ஆம் ஆண்டுக்கான பத்ம விருகளுக்கான பரிந்துரைகளை அடுத்த மாதம் 15ஆம் தேதி வரை அனுப்பலாம் என்று மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த பரிந்துரைக்கான நடைமுறைகள் இந்த ஆண்டும் மே ஒன்றாம் தேதி தொடங்கியது.

தகுதியான நபர்கள், தமது சுய நியமன மனுக்கள், பிறருக்கான பரிந்துரை மனுக்களை தேசிய விருதுகள் தளமான **www.awards.gov.in** என்ற இணையதளம் மூலம் சமர்ப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலை, இலக்கியம், கல்வி, விளையாட்டு, மருத்துவம், சமூகப் பணி, அறிவியல், பொறியியல், பொது விவகாரங்கள், சிவில் சேவை, வர்த்தகம், தொழில்துறை போன்ற துறைகளில் புகழ்பெற்ற சிறந்த சாதனைகள் மற்றும் சேவைகளுக்காக இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

<<<<>>>>

அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. **Lloyd Austin**-னின் அழைப்பின்பேரில் நான்குநாள் பயணமாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் அமெரிக்கா சென்றுள்ளார்.

வாஷிங்டனில் அவர், அந்நாட்டுப் பாதுகாப்புத்துறை அமைச்சருடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

மேலும் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. **Jake Sullivan**-ஐயும் சந்தித்து உரையாடுகிறார்.

அமெரிக்க பாதுகாப்பு மற்றும் தளவாடி உற்பத்தி துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் கூட்டத்தில் தலைமையேற்று பேசுகிறார்.

அப்போது இரு நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்புத்துறை சார்ந்த எதிர்கால ஒத்துழைப்புகள் குறித்து விவாதிக்கிறார்.

<<<<>>>>

இந்த ஆண்டுக்கான மருத்துவம் மற்றும் பல் மருத்துவப் படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான 7 புள்ளி 5 சதவீத உள்ஒதுக்கீடு மற்றும் சிறப்புப் பிரிவு மாணவர்களுக்கான ஒதுக்கீடுகளின் கீழ் கல்லூரிகளில் சேர்வதற்கான ஆணைகளை மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் நேற்று வழங்கினார்.

இந்த ஆண்டு அதிக அளவிலான மாணவர்களுக்கு இந்த ஒதுக்கீட்டின்கீழ் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

தென்காசியில் உள்ள ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த சங்கரநாராயணன் கோவிலில் மஹா கும்பாபிஷேகம் இன்று காலை நடைபெறுகிறது.

இதையொட்டி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறையும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோவிலின் சிறப்புகள் மற்றும் இன்றைய நிகழ்ச்சிகள் குறித்து எமது செய்தியாளர் தரும் தகவல்…

<<<<>>>>

அடுத்த மாதம் 7ஆம் தேதி விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி விநாயகர் சிலைகளை நீர்நிலைகளில் கரைப்பது குறித்து மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் வழிமுறைகளை அறிவித்துள்ளது.

இதன்படி களிமண்ணால் செய்யப்பட்டதும், பிளாஸ்டர் ஆஃப் பாரீஸ், பிளாஸ்டிக் மற்றும் தெர்மாகோல் கலவை அற்றதுமான சுற்றுச்சூழலைப் பாதிக்காத மூலப்பொருட்களால் செய்யப்பட்ட சிலைகளை மட்டுமே நீர்நிலைகளில் கரைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயற்கை சாயம் பூசப்பட்ட சிலைகள் கரைப்பதை தவிர்க்க வேண்டும் என்றும், மாவட்ட நிர்வாகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மட்டுமே கரைக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளது.

<<<<>>>>

*__இருவரிச் செய்திகள்__*

ரஷ்யா – யுக்ரைன் நாடுகளுக்கு இடையிலான சண்டை விரைவில் ஓய்வதற்கு இந்தியப் பிரதமர் பிரதமர் திரு. நரேந்திர மோடியின் யுக்ரைன் பயணம் சிறப்பான பங்களிப்பை அளிக்கும் என்று ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளர் நம்பிக்கை தெரிவித்துள்ளதாக அவரின் செய்தித்தொடர்பாளர் திரு. **Stephane Dujarric** தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

*__விளையாட்டுச் செய்திகள்__*

20 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சம்மேளன சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய அணி இன்று மாலத்தீவு அணியை எதிர்கொள்கிறது.

இந்தப் போட்டி நேபாள் தலைநகர் காத்மாண்டுவில் நடைபெறுகிறது.

இந்திய நேரப்படி இன்று பிற்பகல் மணி 2.45க்கு தொடங்குகிறது.

ஏற்கனவே 3 புள்ளிகள் பெற்றுள்ள இந்திய அணி, இன்று நடைபெறும் போட்டியில் மாலத்தீவு அணியுடன் ஆட்டத்தை சமன் செய்தாலே அரை இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும் வாய்ப்புள்ளது.

<<<<>>>>

சுவிட்சர்லாந்தில் நடைபெற்று வரும் **Lausanne Diamond League** போட்டியில் ஈட்டி எறிதல் ஆடவர் பிரிவு போட்டியில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளார்.

**<<<<>>>>**